**சார்பு நீதிமன்றம், கீரனூர்**
**முன்னிலை – திரு. C. ராஜேஷ்,** B.A., B.L.,
**சார்பு நீதிபதி, கீரனூர்**

2023–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12 ம் நாள் செவ்வாய் கிழமை
2054 திருவள்ளுவராண்டு சுபகிருது வருடம் ஆவணி திங்கள் 26 ம் நாள்

I.A.1/2023
IN
OS.No.135/2022

1. வீரையா
2. முகமது காசிம். ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிராக//

முருகையா. ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது, இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு 24.08.2023–ம் தேதி வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ராஜாக்கிளி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. ரெங்கசாமி, B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனு அபிடவிட், எதிருரை பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

<u>உத்தரவு</u>

அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 06.07.2023 ம் தேதி அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்:</u>**

1. மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். வாதி மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் Pw1 குறுக்கு விசாரணை செய்ய 06.07.2023 ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் Pw1 குறுக்கு

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.09.13 12:15:32 +0530

விசாரணை செய்ய தயாராக இருந்த நிலையில் மனுதாரருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு எழுந்து நடமாட முடியாமல் இருந்து வந்துள்ளார். அதன் காரணமாக அன்றையதினம் Pw1 குறுக்க விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டது. பின்னர் மனுதாரர் உடல்நிலை சீரானவுடன் வழக்கறிஞரை சந்தித்து விபரம் கேட்டபொழுதுதான் வழக்கில் 06.07.2023 ம் தேதியில் மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரியவந்தது. இதுவேண்டுமென்றோ, கவனக்குறைவாகவோ ஏற்பட்டதல்ல. எனவே, வழக்கை மீண்டும் நடத்த மனுதாரர்களுக்கு எதிராக 06.07.2023 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>

2. இம்மனு நிலைக்கக்கூடியது அல்ல. இந்த வழக்கானது கடந்த 2019 ம் வருடம் புதுக்கோட்டை மாவட்ட சார்பு நீதி மன்றத்தில் உரிமை விளம்பல் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு O.S.No.7/2019 என எண்ணிடப்பட்டு, மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது. 2021 ம் வருடம் கீரனூர் சார்பு நீதிமன்றம் தொடங்கப்பட்டதால் மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டு O.S.No.135/2022 எண்ணிடப்பட்டு கடந்த 01.06.2023 ம் தேதி வழக்கானது வழக்குபட்டியலில் போடப்பட்டு எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வேறொரு தேதிக்கு மாற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்டதன்பேரில் மீண்டும் 03.06.2023 ம் தேதிக்கு மாற்றியமைக்கப்பட்டது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. குறுக்கு விசாரணைக்காக மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளின்படி 12.06.2023 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் 26.06.2023 ம் தேதிக்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரின் 06.07.2023 ம் தேதி ஒத்திவைக்கப்பட்டது.

3. மேற்கண்ட தேதிகளில் ஆஜராகி விசாரணை செய்யாததற்கு என்ன காரணம்

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.09.13 12:15:39 +0530

என்பதனை தெளிவாக சொல்லவில்லை. 1ம் பிரதிவாதிக்கு 49 வயதுதான் ஆகிறது. அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு நடக்க இயலாமல் போயிருந்தால் மருத்துவரை அணுகி வைத்தியம் பார்த்ததற்கான ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கலாம். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

**5. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதேயாகும்.**

6. அசல் வழக்கானது உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர தடையாணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பில் ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் முன்வராத காரணத்தாள் அவர்களுக்கு எதிராக 06.07.2023ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் மனுதாரர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் வழக்கறிஞரை சந்தித்து குறுக்கு விசாரணைக்காக விபரங்கள் சொல்ல இயலவில்லை என்றும், அதன் காரணமாகவே வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்யாமல் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டதாகவும், மேற்கண்ட மனுதாரர்களின் செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், ஆகையால் 06.07.2023ம் தேதி மனுதாரர்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டுமென மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது. வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்ய ஆஜராகாமல் போனதற்கு மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் அனுமதிக்க முடிவு செய்கின்றது. இருந்தபோதிலும் இம்மனுவால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டத்தை ஈடு செய்யும் பொருட்டு செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.09.13 12:15:45 +0530

**முடிவாக,**

**இம்மனுவிற்கான செலவுத்தொகையாக ரூ.500/-யை 21.09.2023ம் தேதிக்குள் எதிர்மனுதாரரிடம் மனுதாரர்கள் செலுத்த வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகும் என்றும் உத்தரவிடப்படுகின்றது. அழைக்க 21.09.2023.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு, 2023-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.09.13 12:15:51 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.09.13 12:16:00 +0530

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2023.09.13 12:15:56 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.